# புதுச்சேரி அரசு
# தொழிலாளர் துறை
# தலைமை தொழிற்சாலைகள் மற்றும் கொதிகலன்கள் ஆய்வகம்

***

எண்.1235/CIF&B/A7/2013 தேதி- 10-02-2013

42வது தொழிற்சாலைகளுக்கான தேசிய பாதுகாப்பு வாரம்

04-03-2013 முதல் 10-03-2013 வரை

தொழிற்சாலைகளில் பணிபுரியும் தொழிலாளர்களிடையே பாதுகாப்பு பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தவும், விபத்துக்களை தடுக்கவும், ஒவ்வொரு ஆண்டும் மார்ச் மாதம் 4ஆம் தேதி முதல் ஒரு வாரத்திற்கு தேசிய பாதுகாப்பு வாரம், நாடு முழுவதும் கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது.

தொழிற்சாலைகளில் ஏற்படும் விபத்துக்களால் உயிர்ச்சேதம், பொருட்சேதம் மற்றும் பல இழப்புக்கள் ஏற்படுகின்றன. இதனால் தொழிலாளர்களும் தொழிற்சாலை நிர்வாகத்தினரும் பாதிக்கப்படுகின்றனர். விபத்துக்கள் நடைபெறாவண்ணம் தடுக்கவும், தொழில் சார்ந்த நோய்களைக் கட்டுப்படுத்தவும் ஒவ்வொரு தொழிற்சாலையும் பாதுகாப்பு பற்றிய கருத்தரங்குகள், போட்டிகள் நடத்தியும் மற்றும் பாதுகாப்பு படச்சுருள்கள் காண்பித்தும் தொழிலாளர்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்துவதே இந்த பாதுகாப்பு வார விழாவின் நோக்கமாகும்.

மேற்குறிப்பிட்ட நோக்கங்களைப் பூர்த்தி செய்ய, புதுச்சேரி மாநிலத்தில் செயல்படும் அனைத்து தொழிற்சாலைகளும் அவரவர் தொழிற்கூடங்களில் பாதுகாப்பு பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்த கருத்தரங்குகள், போட்டிகள் மற்றும் படக்காட்சிகள் நடத்துமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

புதுச்சேரி தலைமை தொழிற்சாலைகள் ஆய்வகம் இந்த ஆண்டும், தொழிலாளர்களிடையேயும், தொழிற்பயிற்சி நிலைய மாணவர்களிடையேயும் பாதுகாப்பு பற்றிய **பேச்சுப்போட்டி, கட்டுரைப் போட்டி** மற்றும் **சுலோகம் எழுதும்** போட்டிகளை நடத்துகிறது.

தொழிலாளர் துறை வளாகத்தில் நடைபெறும் பாதுகாப்பு வார விழாவில், மாண்புமிகு முதலமைச்சர் மற்றும் தொழிலாளர் தறை அமைச்சர் அவர்களால் போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு ரொக்கப்பரிசும், சான்றிதழும் வழங்கப்படும்.

பாதுகாப்பு விதிகளை கடைபிடிப்போம்!

உயிர் சேதத்தினை தடுத்திடுவோம்!!

G. ஸ்ரீநிவாஸ்

தலைமை தொழிற்சாலைகள் ஆய்வாளர்